**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**

**அசல் வழக்கு எண்.**194/2019

**2026 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகரத்தினம் | ஜாதி | : | |
| த.பெ | : | முத்தழகுபிள்ளை | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 81/2026 |
| தேதி | : | 18.08.2026 | | | |

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ராமகிருஷ்ணபிள்ளைக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். ராமகிருஷ்ணபிள்ளை உயிருடன் இருக்கும்போதே 1ம் பிரதிவாதியின் அண்ணனான ஆரஞ்சுதேவர் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து குத்தகைக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சித்தையன்கோட்டையை சேர்ந்த கனகராஜ், சரஸ்வதி ஆகியோர் ராமகிருஷ்ணபிள்ளையிடம் நிபந்தணை கிரைய பத்திரம் வாங்கி, ஆரஞ்சுதேவருக்கு குத்தகைக்கு கொடுத்தார்கள். நீங்கள் சொல்வது போல் நிபந்தனை கிரையம் வாங்கவில்லை என்றும், கிரையமாக தான் வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

1978 ல் கனகராஜும், சரஸ்வதியும் குத்தகைக்கு கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்த குத்தகையை TR No.34/1986 என்று பதிவு செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1985 ல் ராமகிருஷ்ணன் மீண்டும் நிபந்தனை கிரையத்தின் படி மனைவி

பெயரிலும், மகள் பவுன் @ காந்திமதி பெயரிலும் கிரையம் வாங்கினார். ஏற்கனவே குத்தகை நடைமுறையில் இருக்கும்போது, தாவா சொத்தை ராமகிருஷ்ணனின் மனைவிக்கும், மகளுக்கும் கனகராஜ் மற்றும் சரஸ்வதி கிரையம் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல.

1985 ல் ஆரஞ்சுதேவர் மேற்சொன்ன கிரையத்தை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தெரிந்துகொண்டேன். அந்த வழக்கு அசல் வழக்கு எண்.408/1985 என்றும், அந்த வழக்கில் குத்தகையின் அடிப்படையில் ஆரஞ்சுதேவரின் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று இடைக்கால பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை படித்து பார்க்கவில்லை என்றும், அதனை மறுத்து பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஆரஞ்சுதேவர் இறந்தபின்பு அசல் வழக்கு எண்.21/2011 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி ராஜேந்திரன் தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி தெரியாது. அந்த வழக்கு ஆரஞ்சுதேவர் ஏற்படுத்திய குத்தகை பத்திரத்தின் அசலும், அடங்கலும் தாக்கல் செய்யாததால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 முதல் 4 அட்டவணை சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. முள்ளும், புதராக உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் அனுபவம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான், சீமைக்கருவேல மரங்கள் தாவா இடத்தில் உள்ளது.

நீங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் 1 முதல் 4 அயிட்ட சொத்தில் இருந்து 1, 2 பிரதிவாதிகளை வெளியேற்றி, வாதிகள் வசம்

சுவாதீனத்தை ஒப்படைக்க வேண்டும் என்று இந்த வழக்கை நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் இந்த 1, 2 பிரதிவாதிகள் வசம் தான் இன்று வரை உள்ளது என்றால் சரியல்ல. உங்கள் வழக்கில் கூறியுள்ள பரிகாரத்திற்கு எதிராக நீங்கள் சாட்சியம் அளித்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் தான் இதுநாள் வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/–Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor